திருச்சிற்றம்பலம்

சைவப் பிரகாசம்.

தொகுதி 1]. ஙள-௵ புரட்டாசி-மீ [பகுதி 2

சமயஞானம்.

உண்ணும், ஊணது ஐயமிலது உணர்வா யோவாது
மன்னுபவர் தீர்க்கும் மருந்து—(திருவருட் பயன்)

உலகின் பற்பல பாகங்களிலும் உள்ள மனிதவர்க்கங்களில் அவ்வக்குழுவினர், தங்கள் தங்கள் நிலைமைக்கும் அறிவுக்கும் ஏற்ற வாறு தமது முன்னோர் நிலைநாட்டிய மதத்தின் உண்மையை யறிவதே சமயஞான மெனப்படும்.

கேவலம் இவ்வுலக இன்பங்கள் போலியாயிருத்தலை யுணர்ந்து, இவற்றினு மேலாய பேரின்பமுள்ளது எனவும், அவ்வின்பமயமான வனொருவனுளன் எனவும், அவனையடையும் நெறியிது எனவும், சுவாநுபூதிமான்களாகிய அவ்வப் பெரியோர்கண்டு வெளியிட்டவைகளே ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் சமயம் ஆகின்றன.

அச்சமயங்கள் யாவும் ஒன்றற்கொன்றுமாறு பட்டனவும், ஒருபுடையொத்தனவும், ஒவ்வாதனவுமாய்த், தம்முள்ளேயே பல வேறுபட்டனவெனினும், முடிந்த முடிவில், பலவாய் விரிந்து பரந்த ஆறுகளனைத்தும் கடைசியிற் கடலிற் சங்கம மாதல்போல, ஒரு பொருளனவே யாகுமென்பர்.

அற்றேனும், பின்பற்றி ஒழுகுவதற்கும் தத்துவாரகசியங்களை நேராய் உணர்தற்கும், சுலபமானதாய், சுருதி யுக்தி அனுபவங்கட்கு முற்றிலும் ஒத்ததாய் நடுநிலைமையாகிய தூரதிஷ்டிக் கண்ணாடிகொண்டு பல்சமயங்களையும் ஒக்கநோக்கி முற்ற வுணர்ந்த தீர்க்கதரிசிகளால் நல்லவையென்றுகண்டு பிடிக்கப்பட்ட சமயங்கள் சிலவே.

எம்மதமும் சம்மதமெனக்கொள்ளும் நல்லோர்க்குச் சில உயர்ந்தவையெனவும், தாழ்ந்தவையெனவுங் கூறுதல் தகுமோ

வெனின், ஆகும். எங்ஙனமெனின், ஓரூர்க்குப் போதற்குரிய வழிகள் பலவற்றினும், குளிர் நிழலும், நறும்புனலும் வழித்துணை நலமும் வாய்க்கப்பெற்றனவும், நேர்வழியினவுமாகியவையே, ஏனைய சூருடைய, கருங்கடநெறியாகியவும், சுற்றுவழியினவுமாகிய பலவற்றினும் சிறத்தல்போல வென்க.

ஒவ்வொருவரும் தாந்தாம் செல்லும்வழியே சிரியதென்பரேனின், அன்றன்று, பலவழிகளிலும் சென்று அறிந்துவந்த ஒருவன் கூறிய கூற்றுக் கொள்ளற் பாலது மேற்கூற்று என்க

(தொடரும்)

பத்திராசிரியர்.

உ

திருச்சிற்றம்பலம்.

சைவசமய மேம்பாடு.

(முன் தொடர்ச்சி)

"யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகியாங்கே
மாதொரு பாகனாரே வருவர்"

'விரிவிலா வறிவினோர்கள் வேறொரு சமயஞ் செய்தே
எரிவினாற் சொன்னாரே னுமெம்பிராற் கேற்றதாகும்"

என்பவற்றாலும்,

"ஆறொன்றிய சமயங்களி னவ்வவர்க் கப்பொருட்கள்
வேறொன்றிலாதன, விண்ணோர்மதிப்பன, மிக்குவமன்
மாறொன்றிலதான, மண்ணோடு விண்ணகமாய்ந்திடினும்
ஈறொன்றிலதான வின்னம்பரான்ற னிணையடியே"

என ஆளுடைய வரசும்,

"வெய்யமாயைக், கூறனைத்துங் கடந்தவெல்லைச் சேடமாகிக்
குறைவற நின்றிடுநிறைவே குலவா நின்ற
ஆறனைத்தும் புகுங்கடல் போற் சமயகோடி
யத்தனையுந் தொடர்ந்து புகுமாதி நட்பே"

எனத் தாயுமானவரும் அருளியவற்றாலும், சைவம் எல்லா மதத்தையும் இனிது தழீஇத் தான் நிகரற நிற்குமுண்மை பெறப்பட்டது.

(தொடரும்.)

அ. வரதநஞ்சைய பிள்ளை.

வேதமும் ஆகமும்.

(முன் தொடர்ச்சி.)

சூத சங்கிதை —

சைவாக மேதிதோதர்ம ஜவரி ஷ்டோ நைவ சம்சய— சைவாக மேதிமேதாதர் மோத்விதா பூர்வ முதீரித" "அதோஸ் ரோதோத் பவஸ்த்வைக ஊர்த்வஸ்ரோதோத்பவ பர": என்னும் வாக்யத்தால் சைவாகமங்களில் கூறிய தர்மங்கள் மிக மேலானவை, ஸம்சயமில்லை சைவாகமத்தில் கூறிய தர்மம் இரண்டு பிரகாரங்களாகும்; அதோ முகத்தால் வெளிவந்தது. அபரம்; ஊர்த்வ முகத்தால் வெளிவந்தது பரமெனவுங் கூறியிருத்தலால். ஊர்த்வ முகத்தாலும், அதோ முகத்தாலும் வெளிவந்த இவ்விரண்டும் வேதமென்பது சூதசங்கிதையின் கருத்தாதல் பற்றி இவ்விரண்டையும் சைவாகமமென வொப்ப முடித்துக் கூறியிருக்கின்றது. தத்புருஷாதி நான்கு முகங்களினின்று இருக்காதி நான்கு வேதங்கள் தோற்றியதாலிவற்றையுஞ் சைவாகமமெனக்கூறிய சூதசங்கிதையின் கருத்து வைதிகராவார் பலரும் அறிந்துப்யத்தக்கதேயாம். வைதிகர் வேதமே எமக்குப் பிரமாணம். சிவாகமெமக்கு அப் பிரமாண்யமென்னும் வாதியின் வாயில் சூதசங்கிதை மண் கொட்டி மூடிவிட்டது. வேதமனாதியென்பது உலக வழக்காதலின் கீழ் முகத்தால் வெளிவந்ததென்பது கூடுமோவெனின், "அஸ்யமஹ தோத்பூதஸ்ய நிசுவஸிதமேதத்ருக்வேதோ, யசுர்வேதோ," என்னும் சுருதி வாக்கியத்தால் இந்த மகா பூதத்தினுடைய மூச்சுக்காற்றே வேதமெனக்கூறி யிருத்தலால், மகதோத் பூதம் சிவபெருமானாதல்பற்றி இப்பரமன் திருமுகத்தால் வெளிவந்ததென்பதை வேதவாக்கியமே சாதித்து நிற்கின்றது. வேதம் சப்த ரூபமாயும், அக்ஷராத்மகமாயுமிருத்தலின் சப்தியையன்றி சப்தம் தனித்திராதாதலின் சப்தி அனாதியும் சப்தம் ஆதியுமாய்க்

கோலமைவுடையதே. வேதத்தில் தானே வேதப் அனாதியெனக் கூறியிருக்கின்றதென்பாராயின் பரமேசுவரர் அனாதியேயாதலால் அவர் திருமுகத்தில் நின்று வெளிவந்த வேதங்களும் அனாதியென்பது சொல்லாமலேயமையும். இதனால் வேதமனாதி யென்பதே தீர்மானம்

இதுவுமன்றி "சிவஞானாசங்கம் வேதமங்கீசைவாகமம்விதய: அங்காங்கிபாவபேதநபா ஸிதம்பரமே சுவரம்" என்னும் வாக்கியத்தால் சிவஞானத்திற்கு வேதம் அங்கமும் சிவாகமம் அங்கியும், அங்காங்கி பாவபேதத்தால் பரமேசுவரர் விளங்குகிறாரெனக் கூறியதால் அங்கத்தைக் கைப்பற்றி அங்கியைக் கைப்பற்றாத வைதிகம் சாலச்சிரிப்படைத்தே பரவித்தை, "ஊருத்வாதோ சுரோதஸோஞ்சை, வத்விதாச்சாம்னாயச் சோதிதம், ஊருத்வ சுரோதோத்பவம், ஞானம், பரஞானமிதீரிதம்; அதோ சுரோதோத்பவஞ் சாபிப்யாபஞ்சேதிரிச்சிதம், பராபரவிபாகாப்யாம் சிவஞானப்பிரகாச்யதே," என்னும் வாக்கியத்தால், ஊர்த்வ முகத்தாலும், அதோமுகத்தாலும் வேதங்கள் தோற்றியதெனவும், ஊர்த்வ முகத்தால் வெளிவந்தது பரவித்தையெனவும், அதோ முகத்தால் வெளிவந்தது அபரவித்தையெனவும், இப்பராபர பேதத்தால் சிவஞானம் பிரகாசித்து விளங்குகிறதெனவுங் கூறியுள்ளதாதலின் சைவாகமமென்பது வேதமே என்பதாம். இவ்வேதம் பரம் அபரமென்னும் பாகுபாடுடையது, இவ்விரண்டும் பரமன் திருமுகத்துதித்த மெய்ந்நூலாதலின் முதற்பிரமாணமுடையதுமாயிருத்தலால் சிவாகமாதிப் பிரமாணிகள் வைதிகராதலிழுக்கன்றே. யாங்கள் வேதாந்தம் எங்களுக்கு சைவாகமம் வேண்டாமென்பாராயின் சூதசங்கிதை, சைவாகமததால் கூறிய தர்மம் இரண்டுபிரகாரமெனவும் மேன்முகத்தாலும், கீழ்முகத்தாலும் வெளிவந்ததென கூறினமைப்பற்றி வேதத்தையும், சைவாகமமெனக் கூறியதற்கிவர் என் செய்வர்.

இவர் வேதாந்தம், வேதத்தையுமன்றே அப்பிராமாண்யமாய் புறக்கணித்தொதுக்கின்றது. வேதாந்தம் வேதமுடிவென்பது

தீர்மானமாதலின் இருக்காதி வேதங்கள் தத்புருஷாதி ஸத்யோ ஜாத மீறுதியாகத்தோற்றிய மெய்ந்நூலாதலின், இதற்கு மேல் ஈசான் முகமொன்றுடையதென்பதும், இவை யவற்றினது சிறந்த மேன்முகமென்பதும், விளங்கற்பொருட்டே "ஈசான ஸர்வவித்யா னும்" என சுருதி உத்கோஷித்து நிற்கின்றது எல்லா வித்தை களுக்கும் காரணமாமென்பது இதன்கருத்து. முண்டகோப நிஷித் தும் பரவித்தை அபரவித்தை யெனக்குறித் தோதியதேயன்றி வேதமெனக்குறித்தோதிய தின்றும் வேதமென்பது ருக்காதி சிவாகமமிருதியாகக்கூறும் பொதுப்பெயர். விசேஷித்துக் கூறு மிடத்தில் வித்யாபிவாசகத்தால் மேம்பட்டு நிற்றலினிவை பரம பரப் பாகுபாடுடையதாம்.

அபரத்தை நோக்கப் பரம் சிறப்புற்று நிற்றலால் வேதம், நாய கிபோலும் சிவாகமம் நாயகன் போலுமுவமித்து பரவித்தை கூறு நிற்கும் "ருக்காதீந்யபிசர்வாணிமாதிருவத்ச சப்பிரமணகம் சிவாக மாநிஸர்வாணி பிதிருவாக்யமிதிஸ்மிருதம் விருத்தஞ்சேத்பரித்யாச் சம ஸங்கிருஷ்ணீயாச்சிவாகமம்" என்னும் வாக்கியத்தால் ருக்காதி வேதங்கள் மாதாவைப்போலும், சிவாகமம் தந்தையைப்போலும், உவமித்துக்கூறி இவ்விரண்டிற்கும் விரோதம் வரின் இருக்காதி களைத்தள்ளி சிவாகமங்களை கிரஹித்தல் வேண்டுமெனக்கூறியிருத்த லால் வேதாந்த வாதமுடைய இவர்கு வஸ்துநிர்த்தேசம் முயற்கோ டாய் முடிதலின், வேதமுமன்றே இவர்களுக்கு அப்பிராமாண்ய மாய்கூற வேண்டிவரும்.

வேதாந்தம் கீழ்முகத்தால் கூறிய வேதமுடிவேயன்றி மேன் முகத்தால் கூறியஸித்தாந்தமன்றுதலி னிவர் முடிபுஸித்தாந்தால ன்றோ நிச்சயித்தறிதல் வேண்டும் ஸித்தாந்தமிவர்க்கு புறம்பா தலின் வேதாந்தத்தாலாய பயனென்னோ. (மஹான் பிரபுவை புருஷ: ஸத்யஸ்யைதர்யபிரவர்த்தக: ஸுநிர்மலமிமாம்பிராப் திரீசா னோஜ்யோதிரவ்ய) என்னுஞ் சுருதி வாக்கியத்தால் ஈசானமுகம் மஹானெனவும், பிரபுவெனவும், புருஷரெனவும், ஸத்தியத்தில் தைர்யமாய் பிரவர்த்திப்பிக்கிறவரெனவும், நிர்மலபதப் பிராப்திக்

குக் காரணரெனவும் ஈசானரென்வும், ஜ்யோதிஸ்வரூபரெனவும்; நாசமற்றவரெனவுங் கூறியிருந்தால் ஈசானமுகத்தினின்று வெளிவந்த பராசுருதியாங் காமிகாதி சிவாகமங்கள் மஹத்தாயுள்ளதெனவும், பிரபுவாயுள்ள பரமேசுவரரைக் காட்டுமியல்புடையதென்பதும் இவன் பரபுருஷரெனநிரூபித்துள்ளதும், ஸத்தியம். அன்றியும் உள்ள பொருள் வடிவத்தில், பிரவர்த்திப்பிப்பரெனவும், மலரஹிதமாகிய சிவதீக்ஷாதி ஸம்ஸ்காரத்தை விதிக்கப்பட்டுள்ளதெனவும், முக்தியைஅடைவதற்கு இதுவே காரணமெனவும், இது ஜ்யோதிஸ்வரூப முடையதெனவும் நாசமற்றதென்வும், இங்ஙனமுற்ற வைபவங்களையுமுடையது. ஈசானமுகமென்பதுந் தெற்றென விளங்கலால் வேதாந்திக்கிவை விருத்தமாதலெங்ஙனங் கூடும். இவற்றாலன்றோ "வேதாந்த ஸித்தாந்த ஸமரஸ நன்னிலை பெற்ற வித்தகச் சித்தர்கணமே" எனத் தாயுமானவர் கூறிய கருத்தும்

இன்னும் வரும்.

சத்யோஜாத சிவாசாரியார்,

திருவானைக்கா.

கல்விப்பயிற்சிக்கு ஏற்ற வழி தாய்மொழி.*

பெரியோர்களே!

நாம் இன்று ஆராயப் புக்க விஷயம் "கல்விப்பயிற்சிக்கு ஏற்ற வழி தாய்மொழி" என்ப துணர்வீர்கள். இவ்விஷயத்தைப் பற்றி விவகரிக்கப் புகுமுன் இச்சொற்றொடரால் குறிக்கப்படும் பொருளை அறிந்துகொள்வோம்.

மொழி என்பது மாந்தருள் ஒருவர் கருத்தினைப் பிறரொருவருக்குத் தெரிவிக்கும் கருவியாயுதவுது; மக்களை விலங்கினின்றும் வேறுபடுத்தி விளக்குவது; பெரியார் கண்டுணர்ந்த அரும் பெரும் உண்மைகளை பிறர்க்குப் பயன் பெறுத்தி உய்விக்கும் கருவியாவது

---

* இவ்வியாசம் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் 5-வது வருடோற்சவத்தில் இராமநாதபுரம் அரசர் அக்கிராசனத்தில் படிக்கப்பட்டது.

இனி, உலகில், வேறு வேறு தேயத்தில் வேறு வேறு மாந்தரும், தத்தம் நாகரிக அளவிற்கேற்பத் தனித்தனி மொழிகள் வகுத்து அவைகளின் உதவி கொண்டு தம்முள் அளவளாவிக் களித்து வாழா நிற்பர். இவ்வாறு வகுக்கப்பட்ட மொழிகளே அவ்வந் நாட்டினர்க்குத் தாய் மொழிகளாகின்றன.

இனி, கல்வி என்பது அறிவு, வித்தை எனப் பொருள் படும். இது கல் என்னும் தாதுவினின்றும் பிறந்தது, கல்லுதலாவது தோண்டுதல் எனவே கல்வியாவது விஷயங்களை ஆராய்ந்தறிவதாம் இவ்வாராய்ச்சியானது மனிதர்கள் நாகரீக நிலை எய்தப்புக்க காலந் தொடங்கி நிரம்பப்பெற்று வருகிறது. இவ்வாறு ஆராய்ந்து காணப் பெற்றன நூல்களில் பொதிந்து வைக்கப்பட்டிருக்கின்றன ஆகவே கல்வியாவது நூல்களைக் கற்றுணர்தலாம்.

இத்தகைய கல்வியறிவினைத் தேடுவதற்கு தாய் மொழியே சிறந்த கருவி என்பது இன்று நாம் காணக்கிடைக்கும் விஷயமாகும்.

இப்பொழுது நமது பள்ளிக்கூடங்களில் கல்விப்பயிற்சிக்கு ஆங்கிலத்தையே முக்கிய கருவியாக உபயோகிக்கின்றனர். நம் தேயம் கீழ் இந்தியா வர்த்தகக் கூட்டத்தாரின் ஆளுகையிலிருந்த போது பத்தொன்பதாவது நூற்றாண்டின் துவக்கத்தில் கல்வியானது தாய் மொழிகளிலோ, அன்றி ஆங்கிலத்திலோ கற்பிக்கப் படவேண்டியதென்பதைப்பற்றி பெரியதோர் ஆசங்கை நிகழ்ந்தது. சுமார் 12-வருஷம் இவ்வாதம் நிகழ்ந்து, கடைசியாக 1835-வரு ஸ்ரீ பெண்டிங் பிரபு அவர்கள் காலத்தில் பிரதம வகுப்புக்களில் பாடங்கள் தாய் மொழியில் நடை பெறினும் உயர்தரக் கல்வி ஆங்கிலத்திலேதான் போதிக்கப்படவேண்டுமென்று முடிவு செய்யப் பெற்றது. இத்தீர்மானத்தால் தாய் மொழிகள் விசேஷமாக வலிகுன்றிச் சீரிழக்கப் பெற்றன

மொழி என்பது விஷயங்களை அறிவதற்கு கருவியாயுள்ளதென்று நாம் கண்டோமன்றோ! இப்பொழுது, தாய் மொழியும் பிற மொழியும், என இரு மொழிகள் உளவாக, நம் கல்வியறி

வினைப் பெருக்கிக்கொள்ள எம் மொழிகளைத் துணைக்கோடாகக் கொள்ளுவது சிறப்புடைத்தென்பது கடா.

தாய் மொழியோ நாம் குழவிப்பருவந்தொட்டு பயின்று வந்தது. பாலோடு அருந்திச் சோறோடு அயின்று, துயிலொடு உறங்கியதாம்; இன்பிலும், துன்பிலும், யாண்டும், என்றும், நம்மொடுபயிலுவதாம்.

இக்கருவியானை விசேஷமாக வருந்தித் தேடப்பெறுவதும் வேண்டுவதில்லை; தேடுவதில் அளவு மிஞ்சிய பொருட் செலவும் இன்று; பழக்கத்தாலும், இயல்பாலும், குணத்தாலும் தாய்மொழியினை உபயோகிப்பதில் மிகக் கைவந்துள்ளோம்

பிறமொழிக்கருவிகளோ, மிக வரிதில் முயன்றே பெறப்படுவன. அளவில் ஊதியச்செலவு நிகழ்விப்பன; அன்றி இவ்வாறு வருந்திப் பெறினும் அவைகளைக் கையாடுவதினும் வல்லமெல்லேம். தாய்மொழிகளால் விஷயங்களை உணருமாறுபோல் பிறமொழிகளால் அறியுமாறில்லை சுருங்கச் சொல்லில் பிறமொழி வாயிற் கல்வி கேவலம் உயிரற்ற செய்கையாகும்

இது மட்டுமா? அன்னிய மொழிகளால் நுண்ணியவாராய்ச்சிகள் நிகழ்த்துவதும், அரிய விஷயங்களைக் கற்றுணர்வதும் நமதின் மாணவர்களின் மூளைக்கு அளவில்லாச் சுமையைக் கொடுக்கின்றன ஆகையின், அவர்கள் மேலும் மேலும் கற்றுத் தேற வியலாதவர்களாவதோடு சரீர சுகமுங்குன்றி விரைவில் முடிவெய்துகின்றனர். நமது மாணவர்கள் தாய் மொழியிலேயே கல்வி பயிலுவதென்றால் செலவாகும் காலத்தையும் பணத்தையும் காப்பாற்றிக்கொள்வதோடு இதனால் எய்தப்பெறும் அளவிறந்த பிரயாசத்தையும் நீக்கிக்கொள்வாரன்றோ?

இக்கருத்தினையே சென்றவாண்டு சென்னைச் சர்வகலா சங்க உயர்தரப் பரீட்சைகளில் தேறிய மாணவர்களுக்கு தகுதிச்சீட்டு அளிப்பதற்காகக் கூடிய மகா சபையில் கனம் ஹாரல்டு ஸ்டுவர்ட்டு

துரையவர்கள் பின் வருமாறு தெரிவித்தார்கள். "நமது பரீக்ஷைகளில் எவ்வளவு பெயர்கள் தவறிப்போகிறார்கள் என்பது எனக்குச் சிறிதும் ஆச்சரியமில்லை; இத்தனை மாணவர்கள் தேறுவதே எனக்கு வியப்பை விளைவிப்பதாகும். உங்களுள் பெரும்பாலர் உமக்கு உரியதல்லாததொரு அன்னிய மொழியில் கல்வி கற்க வேண்டியிருக்கிறது. 240 லக்ஷம் தெலுங்கர்களும், 180 லக்ஷம் தமிழர்களும், தங்கள் கல்வியில் பெரும்பாகத்தை அன்னிய மொழியொன்றின் உதவிகொண்டே தேடவேண்டுமென்பது நம்புவதற்கும் மிகக்கடினமாயிருக்கிறது இவ்வளவு தொகையுள்ள ஜனங்களின் தாய் மொழியை மாற்றுவதென்பது அசாத்தியம். இவர்கள் கல்வியில் பெரும்பாகம் பிறமொழி யொன்றின் உதவிகொண்டே தேடப் பெறவேண்டியதாயின், கல்வி அவர்கள் மாட்டு இலேசாகப் பரவுதற்கில்லை. பிள்ளைகளுடைய முயற்சி யெல்லாம் மொழியைக் கற்பதிலேயே செலவாய் விடுவதன்றி, நூல்களில் கூறப்படும் விஷயங்களை அறிவதற்கு சக்தி யொன்றும் இல்லாது போய் விடுகிறது இத்தகைய பழக்கம் வீணே காலத்தையும் அறிவையும் செலவு செய்விப்பதன்றி யாதும் பிரயோஜனம் உள்ளதாகத் தெரியவில்லை"

சின்னாள் முன்னர் மதுரையில் கல்விப்பயிற்சி சம்பந்தமாகக் கூடிய மகாசபையில் (Educational Conferance) சபாநாயகம் வகித்த ஸ்ரீமான் **P. T.** ஸ்ரீனிவாஸய்யங்காரவர்களும் இவ்வபிப்பிராயத்தைத் தழுவியே பேசினார்கள். கனம் ஹார்டிஞ்சு பிரபு அவர்கள் சென்றவாண்டு இலாகூரில் விலங்குகளின் சிகிச்சை முறைகளைப் பற்றிப் போதிக்கும் பாடசாலை யொன்று தாபகமானபோது பிற பாடசாலைகளைப் போலாது, அங்குச் சுயபாஷையிலேயே மாணவர்களுக்குக் கல்வி போதிப்பதாகச் செய்திருந்த ஏற்பாட்டினைப்பற்றி மிக வியந்து பேசியுள்ளார்கள்.

உலகெலாம் போற்றும் மகா பண்டிதரான கனம் இரவீந்திரநாத் டாகூர் அவர்களும் தாய் மொழியிற் கல்வியே சிறந்ததெனக் கொண்டவர்களென்பது அறிஞர் பலரும் நன்குணர்ந்ததொன்றாம்.

இவ்வாறு பிரபல அறிஞர்கள் பலரும் பிறமொழியிற் கல்வி பயிற்றுவது அவசியமில்லாத்துயரத்தை நமதிளமாணவர்களுக்குக் கொடுத்து அவர்களுடைய அறிவாற்றல்கள் நன்கு பிரகாசியாது கெடுக்கிறதென்று அபிப்பிராயப்பட திருவல்லிக்கேணி பெண் பாடசாலையில் கல்விப்பயிற்சி ஆங்கிலத்தில் நிகழ்வதைப்பற்றி, சில மாதங்களுக்கு முன் சென்னை சட்ட நிரூபண சபையில் எழுந்த ஆசங்கைக்கு விடையளிக்க முயன்ற சென்னை வித்தியா இலாகா தலைவர் கனம் ஸ்டோன்ஸ் துரையவர்கள் இதற்கு முற்றும் முரண்படப் பேசினமை மிகவும் வியப்பை விளைப்பதாகும்.

நமது இந்தியா நாட்டிலுள்ள தாய்மொழிகளுள் பல மிகப் பழமை வாய்ந்தனவும், அளவற்ற இலக்கிய இலக்கணக் கிரந்தங்களுடையனவுமாவன. தாய்மொழிகளில் அமைந்துள்ள நூற்கள் அவ்வம்மொழிக்குரிய இனத்தார் கண்டறிந்த உயர்ந்த கருத்துக்களையும், அவருட் பெரியோர் பலரும் போதித்த அரும்பெரும் உண்மைகளையும் அடக்கி நிற்பனவாம். இவைகள்யாவும் அவ்வவ் வினத்தினர் உலகில் முன்னேற்றமடைவதற்கு இன்றியமையாது வேண்டப்படுவன. இத்தகைய இலக்கியங்களைப் படித்துத்தேறி அவை கூறும் வழியொழுகி யார்தம் முன்னேற்றமடைவது தாய்மொழிப்பயிற்சியினாலேயே எய்தப் பெறுவதொன்றும். இவ்வுண்மையினை நன்கறிந்தன்றோ ஸ்ரீமான் காந்தரவர்களும் தாம் புதிதாக ஆரம்பித்த ஆச்சிரமத்தில் தாய்மொழியினையே கல்விப்பயிற்சிக்கேற்ற கருவியாகக் கொண்டனர்.

பின்னரும் பாருங்கள்! ஒவ்வொரு மொழியும், ஒவ்வொரு நாடும், ஒவ்வொரு மக்கட் டொகுதியும் உலகின் நாகரீகத்தை வளர்க்கும் தொழிலில்,

தொடரும்

வே. இராதாக்கிருஷ்ண பிள்ளை B. A.,

கம்பன் கவி நுட்பம்.

"இம்பர் நாட்டிற் செல்வமெலாமெய்தி யரசாண்டிருந்தாலும்
மும்பர் நாட்டிற் கற்பகக்காவோங்கு நீழலிருந்தாலுஞ்
செம்பொன் மேருவனைய புயத்திறல்சேரி ராமன்றிருக்கதையிற்
கம்பநாடன் கவிதையைப்போற் கற்றோர்க்கிதயம் களியாதே."

"என்பது கம்ப ராமாயணச் சிறப்புப்பாயிரம், இவ்வுலகில் அகண்டைசுவரியமும், ஏக சக்கிராதிபத்யமும் பெற்றுச் செங்கோலேச்சும் இன்பமும், அன்றி, அமுதமுண்டு நரை திரை மூப்பு அற்று ரம்பாதி போக மனுபவிக்கும் இந்திரப்பதவி பெற்றாலுண்டாகும் சுவர்க்கவின்பமும், கம்பராமாயணத்தில் ஒரு செய்யுளைக் கற்றதாலெய்து மின்பத்துக்கு ஒப்பாகா" என்பதிதன்பொருள்.

இக்கவியை நான் முதலிற் கற்றபோது, 'கவிகள் கூறும் வழக்கப்போய்' இதுவென்றே நினைத்தேன. பின்பு கற்றும், ஆராய்ந்தும், கற்றோரோடு பயின்றும், கேட்டும், கம்பன் கவிநயத்தை உணர உணர "ஆயுந்தொறுந் தொறுமின்பந்தருங்கல்வி" "அறிதோ றறியாமை கண்டற்று" என ஆன்றோர் மொழிந்தவை அனுபவத்தில் உண்மையாகவே முடிந்து நான் முன் எண்ணியது தப்பு, பரமபதவின்பமும் இதற்கீடாகாது' என வியந்தேன்.

அறிவான் வருமின்பம் ஏனை உலகவின்பங்களின் வேறாய்ச் சிறந்தது என்பதை யுணர்த்தற்கன்றே. "நாட்டிய மரபினெஞ்சு கொளி னல்லது காட்டலாகாப் பொருளே" யும் அங்கை நெல்லி போற்காட்டும் மெய்ப்பாட்டியலில் உவகைச்சுவையை முற்பட ஓதவந்த ஆசிரியர் தொல்காப்பியனார். "செல்வம் புலனே புணர்வு விளையாட்டென அல்லனீத்த வுவகை நான்கே" என, அறிவான் வருமின்பத்தை ஏகாரத்தாற் றனிப்படப் பிரித்து அதன் சிறப்பை வலியுறுத்துவாராயினர்:

கவிகள் விளைக்கும் இன்பம் இப்பெற்றித்தாதல் ஒரு பாஷையை ஆழ்ந்துகற்றுச் சொற்பொருளின்பச்சுவை புணர்வோர்க்குத் தெரியுமல்லது பிறர் அறிய முடியாது. மேற்காட்டிய தலைப்பில் எனது சிற்றறிவுக்குத் தென்பட்டபடி ஏதோ கூற வருவதைப் பொறுத்துத் திருத்தங்காட்டுமாறு தமிழுலகத்தை மிகவும் வேண்டுகின்றேன், ஓர் காரியத்தில் அறியாதவன் பிரவேசிப்பதைக்கண்டு நாணி அறிந்தோர் அதனைச்செய்து முடித்தல் இயல்பாதலின், நான் தொடங்கிய இவ்விஷயத்தில் கற்று வல்லபுலவர்சிகாமணிகள் புகுந்து நன்குபெறத் திருத்தம் செய்வரென்றும், எனது சகோதரனால் நடாத்தப்பெறும் இப்பத்திரிகை, சிறந்த விஷயங்களைக்கொண்டு வெளிவருதல் வேண்டியும் இவ்விஷயத்தில் தலையிட்டேன்

கவிச்சக்கரவர்த்தியார் கவிகளை நான் ஆராய்ந்தமட்டில் கதைப்போக்கில் ஒருவர்க்கொருவர் சம்பாஷிக்கும் சந்தர்ப்பங்களிலேயே மிகவும் ஆழ்ந்து தெளிந்து தோற்றும் அழகிய இனிய நுண்பொருட்களும், அர்த்த புஷ்டியுடன் பல பொருள் தோற்றும் பதப்பிரயோக அடுக்குகளும், நவ நவமாய் அமைந்துள்ளன ஸ்ரீராமன், ஜானகி, ஆஞ்சநேயர் முதலியோர் கூற்றுகக் கவி கூறுமிடங்களில் நேரில் நின்று பேசினால் எப்படியோ அப்படியே அவரவர் புத்தி விசாலம், வாக்குத்தோரணைகளைப் பிரத்யக்ஷப்படுத்தும் அருமைக் கவிகள் நிலவுகின்றன.

பழைய சங்க நூல்களிற் போல உள்ளதை உள்ளபடி வருணிக்கும் இயற்கை அழகு பாவிகவணி பற்பலவிடங்களில் காணப்படும். ஒன்றை வருணித்து முடிக்கும்போது இவ்விஷயத்தை இப்படியன்றி வேறெவ்விதம் கூறினும் இத்தனை மீசுரமாயப் பொருள் சிறவாது என்று கற்போர் கருதுமாறு வியப்புள்ள பொருட் கவிகள் வருகின்றன. சிங்காரம் முதலியவைகளைப் போலப் பத்திச்சுவையும் ஏற்ற இடத்தில் பொருந்திக் கற்போருக்கும் கேட்போருக்கும் அவ்வச் சத்துவத் தோற்றம் மெய்ப்பட வுள்ளத்தைத் தன் வயமாக்கும் குணத்தால் தனி சிறந்துள்ளன ஒரே செய்யுளில் ஒன்றற்

கொண்டெதிரிடையான பொருட்கள் தோன்றி மகிழ்வூட்டுகின்றன. இராமன் மானிட உருக்கொண்டு தன் தெய்வத்தன்மையை மறந்தானில்லை என்பதற்கு நிதர்சனமாக ஆங்காங்கே கதைக்கேற்ற பொருளைத் தவிரவும், கூடார்த்தமாக அவரது தெய்வத்தன்மையைப் புலப்படுத்தும் செய்யுட்களும் பல. இன்னும் எத்தனை சொல்வது! பெருங்காப்பியங்களின் இலக்கணம் முற்றும் அமைந்து தமிழ்ப்பாஷையின் இனிமை, அருமை, பெருமை, பழமை, முதலியவற்றை மிகத்தரமாகப் புலப்படுத்தும் நவரசக்களஞ்சியமாய் அமைந்துள்ளன கம்பன் கவிகள். அவற்றிற் சிலவற்றை மாதிரிக்காக பொழிப்பு, அகலம், நுட்பம், எச்சமென்னும் நால்வகையுரை யிலக்கணங்களையும் தழுவி ஒருவாறு கூறுவேன்.

பாலகாண்டத்தில் வசிட்ட முனிவர்பால் தனக்குப் புத்திரில்லாக் குறையைப்பற்றிப் பேசும் சமயத்தில் தசரதன்:—

“ அறுபதி னாயிர மாண்டு மாண்டுற
வுறுபகை யொடுக்கி யிவ்வுலகை யோம்பினேன்
பிறிதொரு குறையிலை யெற்பின் வையகம்
மறுகுறு மென்பதோர் மறுக்கமுண்டரோ.”

எனக்கூறினதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இச்செய்யுளின் நயங்களை நோக்குவோம்.

உலகின் நானாபோகங்களையும் அநுபவிக்க முதலில் ஆயுள் விருத்தி வேண்டும் ஆயுளிருப்பினும் மன்னு வுலகத்து “ மன்னியமூன்றின் நடுவணதெய்த விருதலையு மெய்தும்” என்றவாறே எல்லாப்போகங்கட்கும் இன்றியமையாத பொருட் செல்வம் வேண்டும். அஃதிருப்பினும், ஒருவர் கீழ்ப்படிந்து அவர் தயவை எதிர்பார்க்கும் இழிவறத் தாமொரு பேரரசனாதல் வேண்டும். “ பொன்னினாகும் தரணியிற் பின்னையாகும் பெரும்பொருள் அப்பொருள்—துன்னுங் காலைத் துன்னாதன வில்லையே ” என்றபடி சக்கரச்செல்வம் பெற்றும் பகையரசரால் தன் வாழ்வும் மதிப்பும் குலையாதபடி அரண்,

படை முதலிய அங்கங்களும், தேக பலமும், ஆயுதப்பயிற்சியும் சமயோஜித ஸாகஸைக்ய யுக்தி புத்திகளும் வேண்டும். இவை முற்றும் இருப்பினும் உலகைத் தாய்போல் தாங்கும் செங்கோலனும் இம்மை மறுமைக்குச் சார்த்தகமாகப் புகழ் பெறவேண்டும். இவற்றைத்தவிர உலகில் பெறக்கிடந்த பேறு வேறில்லை. 'நான் இவை முற்றும் தங்கள் அருளினால் பெற்றுள்ளேன்' என்பதை முறைப்படத் தொகுத்து விளக்கி, 'அறுபதினாயிரமாண்டு' எனத் தன் ஆயுள் விருத்தியையும், 'பகை ஒடுக்கி உலகை ஓம்பினேன்' எனத் தன் வலியும், சக்கரச் செல்வமும் கூறி, உலக போகங்களால் ஒரு குறைவுமில்லேன் என்பான் 'பிறிதொரு குறையிலை' என்றான்.

உலகை ஆண்டேன் என்னாமல் "ஓம்பினேன்" (காப்பாற்றினேன்) என்ற பிரயோகத்தால் தனது செங்கோன்மை கூறினான். செங்கோன்மை கூறவே அது காரணமாக வரும் புகழும் பெற்றவாறாயிற்று. ஓம்பினேன் எனத்தன்மை ஒருமையிற் கூறியது, சைன்ய பலங்களினும் தன் தேக பலம், ஆயுதப்பயிற்சி முதலியவை சிறந்ததென்பதை விளக்கும். தான் அன்போடு பரிபாலித்த தன்மையும், பெறுதற்கருமையும் தோன்ற 'இவ்வுலகு' எனச் சுட்டிக் கூறப்பட்டது.

'பிறிதொரு குறையிலை' (வேறொரு குறைவுமில்லை) என்னும் சொல்லாற்றல் ஒரு குறை மாத்திரமுண்டு எனப்பின் வரும் விஷயத்தைத் தோற்றுவாய் செய்தது. குரு சிரேஷ்டர் முன்னிலையில், இத்யாதி போகங்களையும் துய்த்து வெறுக்கும் வயோதிக தசையில் ஞானோபதேசம் கேட்டலை விட்டுப் புத்திரப்பேற்றை விரும்புவது வெட்கமாகவும் அநுசிதமாகவும் தன் பெருந்தன்மைக்கு இழிவுண்டாக்குதல் பற்றி அதனை நேரே வெளியிடாது வேறொரு வகையில் மொழிகின்றான்:— 'எற்பின் வையகம் மறுகுறும் என்பதோர் மறுக்கமுண்டு' என்னால் அன்புடன் காப்பாற்றப்பெற்று வரும் இவ்வுலகு எனக்குப்பின் என்னைப்போல இரக்ஷிப்பதற்குரிய தக்கோரின்மையால் வருந்துமே என்னும் வருத்தம் ஒன்று என் மனத்தை வாட்டுகின்றது என்று கூறினான். எனக்குப் புத்திரரில்

லாக்குறை ஒன்றுமே உளது என்பதினும் இவ்வாறு கூறுதலில் பெருஞ் சிறப்புண்டாயிற்று. அரசனுக்குப் புத்திரனில்லாக் கவலையும், உலகத்தைக் காக்கும் நிமித்தம் பற்றி வந்ததேயன்றி மழலைச் சொற் கேட்டானந்தித்தல் முதலாகிய தன் சுய நலங் கருதி வந்ததன்று எனப் பொருள் பட்டு, தன் சுய நலத்தைச் சிறிதும் விரும்பாது "வையம் மன்னுயிராக வம் மன்னுயிர் உய்யத்தாங்கும் உடலன்ன மன்னவன்" தசரதன்; உலகப்பிரஜைகளை அத்துணை அன்புடன் காப்பாற்றினன்; தான் பெறும் ஒவ்வொரு பொருளும் லோகோபகாரத்தின் பொருட்டென்றே கருதி ஒழுகிய "தனக்கென வாழாப்பிறர்க்குரியாளன் அவன்; என இவனது ஒப்புயர்விலலா மெய்க் கருணையைக் காட்டிற்று. இப்படியன்றி வேறெவ்விதமாகக்கூறினும் பொருள் இத்துணை சிறக்குமா ?

'வையகம் மறுகுறும் என்பதோர் மறுக்கம்' என்ற பிரயோகமும் மேற்காட்டிய பக்ஷத்தை வலியுறுத்தும். என்னை ? மறுகு என்னும் பகுதியடியாகப் பிறந்த மறுகுறும் என்னும் சொல் வையகத்தை அடுத்து நிற்க, அதே பகுதியடியாகிய மறுக்கம் அரசனைச் சார்தலால், உலகமுறுந் துன்பம், அதனிடத்து இரங்கிக் கண்ணுங் கருத்துமாய்ப் போஷித்து வந்த அன்பின் தொடர்ச்சியால் எனக்கு வந்ததேயன்றி எனக்கென வேறோர் குறையில்லை எனத் தன் தத்வ ஞான மனோநிலையத்தையும் அரசன் குறிப்பித்தவாறாயிற்று. 'அறுபதினாயிரமாண்டும் மாண்டுற உலகை ஓம்பினேன்' என்றமையின் இளமைத்தொட்டே பாரம்பரிய வுரிமையால் அரசாட்சி புரிந்தேன். என் முன்னோர் அரசுரிமை என்னால் வஹிக்கப்பட்டாற் போல எனக்குப்பின் என் சந்ததியார் ஆளுதற்கில்லையே! குலவிச்சை கல்லாமற் பாகம் படும் ஆதலின் இவ் வம்சத்துத் தோன்றும் உயர்குடிப் பிறப்பு, நற்பயிற்சி முதலியவை காரணமாக என் வழித்தோன்றுவோர் உலகை நன்கு பரிபாலிப்பரென்று நம்பலாம். அவ்வாறு சந்தானோற்பத்தி யின்மையால் வேறொரு கொடுங்கோலனுடைக்குட்பட்டு உலகம் எவ்வாறு வருந்துமோ! என அநுதபிக்கின்றேன். என்றானாயிற்று.

இனி * 'எற்பின்' என்பதை எல் + பின் எனக்கண்ணழித்து. சூரியவம்சம் முடிவுற்றபின், உலகம் மறுகும்; சூரியன் மறைந்தவுடன் உலகை இருள் சூழ்ந்து சோரர் முதலிய துஷ்டர்கள் தீங்கிழைத்தல் போன்ற கேடுகள், நேர்வது பிரத்யக்ஷமன்றோ? எனக்கூறியதாக உரை கோடலு மொன்று

(தொடரும்)

அ. வரதநஞ்சைய பிள்ளை.

சிவராத்திரி யாசங்கை.

1. மஹா சிவராத்திரி சைவஸமயிகளாகிய நம்மனோர்க்கு அநுஷ்டித்தற் பாலாகிய மஹா விருதமாதலால் பின்வரும் ஸந்தேகங்களுக்கு விவேகிகள் விடை தருவாராக. பரிதாபி-ஞு மாசி-மீ 22-உ திர. 44. 48-ஷை-மீ 23-தேதி சதுர்த்தசி, 55. 4. இவ்விரண்டு தினத்தில் 22-தேதியில் சிவராத்திரி செய்த மடாதிபர்கள் சிலரும், 23-தேதியில் சிவராத்திரி செய்தவர் அநேகமாயிருத்தலின், எது விசேஷமென்பதை சாஸ்திரவாயிலாய் விளக்குவது லோகோபகாரமாகும்.

2. ஆனந்த-ஞு மாசி-மீ 1-தேதியில் அநேகர் மஹா சிவராத்திரி யனுஷ்டித்தும் ஷை மாதமாகிய 30-தேதியில் சில மடாதிபரும் சில ஆலயங்களிலும் மஹா சிவராத்திரி கொண்டாடியும் இருக்கிறார்கள் அதற்கு சாஸ்திரங் கூறுவார்களாக.

3. அனல-ஞுமாகிய இவ்வருஷத்தில் மாசி-மீ 8-தேதி த்வாதசி, 1-17 திரியோதசி, 54-12. ஷை-மீ 1-தேதி சதுர்த்தசி, 49-41-மாயிருத்தலால் எதில் மஹா சிவராத்திரி செய்தல் வேண்டுமென்பதை சிவாகம வாக்கியத்தோடு எழுதுவார்களாக.

தற்புருஷசிவம்.

* எல் = சூரியன். ஆகு பெயரால் அம்மரபை யுணர்த்தலும்.

பொய்யா மொழிப் புலவர் சரிதம்.

நேரிசை வெண்பா.

பொய்யா மொழிப்புலவன் காதை புகல்வதற்கு
மெய்யா மறிவெனக்கு மேவுவிக்க—கையார்
முகத்தானே யன்பேறு மூதறிஞர் ருள்ளத்
தகத்தானே முன்னின் றருள்.

வரகவியாக உலகம் புகழத் திகழ்ந்து பெருமையுடன் சிறந்த பொய்யா மொழிப்புலவரின் ஜீவிய வரலாற்றை எழுதி வெளியிட வேண்டுமென்பதில் கவலை மிகத்தோன்றி அதில் முயற்சி கொண்டு வந்தோம். நமது நன் முயற்சியின் பலன் பெரிதும் பிரதி பலிக்க வாய்க்கவில்லை; காரணம் நமது செந்தமிழகத்தில் யாவரும் பரவும் மேவரும் சிறப்புடன் வீற்றிருந்த தமிழ்ப் பெரும் புலவர்களது அரும் பெருஞ் சரிதைகளை, அன்னார் வாழ்ந்த காலம், இடம் குணம், கல்வி, சிறப்பு, அபிமானித்த பிரபு முதலிய சம்பவங்களை நமது முன்னோர், பின்னோ ருணர்ந்து மகிழுமாறு போற்றிவைக்கத் தவறியதால் நாமறிந்துரைத்தற்கு இயலாததே. மேனாட்டு நாகரீகஞ் சிறந்த ஆங்கிலக்கவிகளின் சரிதங்களில் இத்தகைய குறைகள் காண்பது அபூர்வமாகும். சென்றதற் கிரங்குவது விவேகமன்றெண விடுத்து இப்புலவர் விஷயமாகத் தற்காலம் வழங்கப்பெரும் "பாவலர் சரித்திர தீபகம், புலவர் புராணம், தமிழ் நாவலர் சரிதை, சோழ மண்டல சதகம், தொண்டைமண்டல சதகம், தனிப்பாடற்றிரட்டு, அபிதான கோசம், அபிதான சிந்தாமணி, செந்தமிழ்ப்பத்திரிகை," முதலிய நூல்களில் காணப்படும் கருத்துகளை ஆதாரமாகக்கொண்டு ஒருவாறு இப்புலவர் வரலாற்றைக் கூறுவோம். (இவர் சரித்திரத்தைக் கூறப்புகும் வரலாற்றில், இவரது இயற்பெயர், ஜனன

விசேடம், தாய் தந்தையர், இளமையின் வளர்ச்சி, முதலியவை இப்போது அறியக்கிடைக்காமையால் அவை விடுபட்டுள்ளன வென்பதை வாசகருணரவேண்டும்.)

இனிப்புலவர் வரலாறு வருமாறு:—

பொய்யா மொழிப் புலவர் நாடு "தொண்டை நாடு" என்பதும், இவர் ஜனனதலம் அம்மண்டலத்திலுள்ள "செங்காட்டுக் கோட்டத்துறையூ" ரென்பதும் அடியில் வரும் பாடல்களால் அறியப்படுகிறது.

"கையா றிரண்டுடைக் காளைதன் வாயிற் கவிதை கொண்ட
பொய்யா மொழிக்கும் புகலிட மாயது பொய்கை யெல்லாம்
செய்யார் கமல மலரவண் டானங்கள் சென்று திகழ்
மையார் குவளை வயல்புடை சூழ் தொண்டைமண்டலமே"

(தொண்டைமண்டல சதகம்.)

பொதியி லகத்தியனும் பொய்யா மொழியாய்
அதிகை யமரப்பர்க் காளாய்த்—துதி பெருகு
செங்காட்டுக் கோட்டத்துறையூ ரெனுந் தலத்துச்
சங்காத்தங் கொண்டிருப்பாய் தான்.

(தமிழ் நாவலர் சரிதை)

இவரது இளமைப் பருவத்தில் வித்தியாப்பியாசத்தின் பொருட்டு தந்தையார் அக்காலத்தில் தொண்டை நாட்டு "வயிரபுரத்தில்" சிறந்த பண்டிதராக விளங்கிய ஓர் உபாத்தியாயரிடத்து தம் மகனை ஒப்புவித்து கல்வி பயிற்றுமாறு வேண்டினர். ஆசிரியரும் அங்ஙனமே ஆகுகவென அச்சிறுவனை யேற்றுக் கல்வி போதித்த காலம் போக மற்ற வேலைகளில் தமது கால் நடைகளைக் கவனித்து வரும்படி கட்டளையிட்டிருந்தனர். சிறுவனும் அவ்வாறே நடந்து வந்தான்.

---

* 'பதிகவமணப்பாக கிழாய்' என்று எட்டிலிருந்த பாடம்.

இங்ஙனம் நிகழும் நன்மைமானறல் ஆசிரியர் கம்புக்கொல்லையின் விளைபயிரை அவ்வூர் அதிகாரி "காளிங்கராயப்" பிரபுவின் குதிரை மேய்ந்து பாழ்படுத்தியது நித்திரையிலிருந்த சிறுவன் திடுக்கிட்டு விழித்துத் தனது அஜாக்கிரதையால் குதிரை செய்த கொடுமையை நினைந்து மெத்த வருந்திச் செய்யும் வகையறியாது ஆசிரியர் தண்டனைக்கஞ்சி அடுத்திருந்த ஆலயத்தில் கோயில் கொண்டருளிய காளி தேவியின் சந்நிதியிற் சென்று விஷய முணர்த்தி முறையிட்டழுது தொழுதனர். சிறுவனது பரிவும், ஜன்மாந்திரத்தவப்பயனும், ஆகூழும் ஒருங்கு கூடிக் காளியின் திருவுளத்தைக்கனியச் செய்ய, தேவி மகிழ்ந்தவளாய்க் காளமேகப் புலவருக்கு அகிலாண்ட நாயகியார் வலியத் தரிசனம் தந்து ஆட்கொண்டருளிக் கவி பாடச் செய்தவாறு இச்சிறுவனுக்குத் தரிசனம் தந்து நாவைத் திறக்குமாறு கட்டளையிட்டு தமது சூலத்தால் பீஜாக்ஷர மெழுதி "இவன் வாக்கினின்றெழும் சொல் பொய்யாததாக" என அநுக்கிரகித்து மறைந்தனர்.

இவ்வாறு வலிய வந்து காட்சி தந்து ஆட்கொண்டருளிய தேவியின் தரிசன விசேடத்தால் உள்ளத் தெளிவும் கல்வி யுணர்ச்சியும் தாமே சுரக்கத்தொடங்கின; கவி பாடும் திறமையும் உயர்ந்த எண்ணங்களும் இவர் மனத்தில், தோன்றி ஊற்றெடுத்தன. களிம்பு நீங்கிய செம்பு போல அறியாமை நீங்கிய இயல்பினராய்க் கண்டார் யாவரும் விரும்புமாறு விளங்கித் தோன்றினர்; தேவியைப் பலவிதமாகப் புகழ்ந்து பாமாலை சூட்டி வணங்கினர். பின்னர், ஆசிரியர் கம்புக்கொல்லையை அழித்த குதிரையின் மீது சினங்கொண்டு கோயில் நீங்கி குதிரையையடுத்து,

"வாய்த்த வயிரபுர மாகாளி யம்மையே!
ஆய்த்த அருகா ரணிவயலிற்—காய்த்த
கதிரைமா ளத்தின்ற காளிங்கனேறுங்
குதிரைமா ளக்கொண்டு போ."

(தமிழ் நாவலர் சரிதை.)

---

* இச்செய்யுளும் இதின் விருத்தாந்தமும், கம்பருடையதாகக் கூறப்படுகிறது தவறெனத் தமிழ் நாவலர் சரிதையா லறியக்கிடக்கின்றது.

எனக்கூற இவர் வாக்கு விசேடமும், தேவியின் அநுக்கிரகமும் பொய்யாதவாறு அக்குதிரை சட்டென விழுந் துயிர் நீத்தது. அருகிருந்தார் உ ப்புதுமையை அதிகாரிக்கறிவிக்க அவர் ஆசிரியருடன் அங்கு வந்து விஷயமுணர்ந்து அவரையணுகி, 'நம் வாக்கின் நன்மையமைந்தவா வியப்பு; அற்றாயின் இறந்ததனை மற்றோர் கவியால் மீட்க' வென வேண்டிக்கொள்ள அவரும, தேவியை நினைந்து

வாய்த்த வயிரபுர மாகாளி யம்மையே
ஆய்த்த வருகா ரணிவயலிற்—காய்த்த
கதிரை மாளத்தின்ற காளிங்கனேறும்
குதிரை மீளக் கோண்டுவா

என அக்கவியைத் திருப்பிப்பாடினராக, அக்குதிரையும் உயிர் பெற்று உடலுதறி எழுந்து நின்றது இது கண்ட ஆசிரியர் அவரது சாபாநுக்கிரக சக்திக்கு வியந்து மகிழ்ந்து அவரை யிறுகத்தழுவி நீர் "போய்யா மோழியீர்" என்று கூறி ஆசீர்வதிக்க அதுமுதல் அவரை யெவரும் டோய்யாமோழியா ரென்றே வழங்கி வருவாராயினர்.

தாய் தந்தையரிருவரும் தமது அருந்தவப் புதல்வராகிய போய்யா மோழியின் புலமைத் திறத்தினைக்கேட்டு,

" ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய் "
" சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே "
" சான்றோரென்கை யீன் றோர்க்கழகு "

என்னும் இலக்கணத்துக் கொத்துப்பெருமகிழ்வு கொண்டாடினர் (இது தொடங்கியிவர் மதுரைப்பிரயாணம் வரை, யாதொரு வரலாறும் தெரிவதற்கில்லை.)

காளியின் திருவருள் பெற்றுக் கவிஞர் சிகாமணியாய் விளங்கிய இவர், மதுரைமாநகரில் பாண்டிய மன்னர்களால் செந்தமிழறிஞர்

களில் சிறந்தோரைக் கூட்டி நன்கு பரிபாலித்த தமிழ்ச்சங்கம் மூன்றும் *நிலைகுலைந் தழிந்து ஒழிந்ததை யுணர்ந்து மீண்டும் அத னைப் புதுப்பித்துத் தமிழை வளம்படுத்த ஆவல்கொண்டு,

"சந்தனப்பொதியச் செந்தமிழ் முனியுஞ்
சவுந்திர பாண்டிய னெனுந் தமிழ் நாடனுஞ்
சங்கப்புலவருந் தழைத்தினி திருக்கு
மங்கலப் பாண்டிவளநாடு'

காணாத தொண்டை நாட்டினின்றும் வழிக்கொண்டனர். இடையி லுள்ள, சைவசித்தாந்த பிரசாரகராம் தாயுமானப் பெருந்தகையார் அவதரித்த திருத்தலமாகிய திரிசிராப்பள்ளியை யடைந்து சில நாள் தங்கியிருந்தபோது புலவர்பால் கவிபெற்றுக் களிக்க விரும்பிய "பாட்டுக் குவந்தருளும் பரமேட்டி" ஓர் புலவர் வேடம் புனைந்து பொய்யாமொழியை யணுகித் தமிழ் விஷயமாகச் சில வாது நிகழ்த்தி,

கோட்டாற் கொழும்பிரசங் குத்தி யதனடுவே
பாட்டாற் பனைக்கை புக மடுக்கும்—காட்டானை
தேனீ ரருந்துஞ் சிராமலையே செஞ்சடைமேல்
வானீர் கரந்தான் மலை (தமிழ் நாவலர் சரிதை)

காட்டானை தனது கொம்பினால் தேன்கூட்டைக்குத்தி அந் த் துவாரத்தின் நேரேயே தனது பொருத்து தலையுடைய பனைபோ லும் துதிக்கையை நீட்டி அங்கிருந்து வாழியும் தேனாகிய நீரைக் குடிக்கும் (மலை வளம்) செழுமை வாய்ந்த திரிசிராப்பள்ளி மலை யே: 'கங்காதரனது மலை" எனப்பொருள் தரும், எனுங்கவி யைக் கூறித் தாம் விரும்பி யுறையும் திருத்தலம் இஃதெனப் புலவர்க்குணர்த்தி மறைந்தனர்.

(தொடரும்)

சி. கு. நாராயணசாமி முதலியார்.
கோயமுத்தூர்.

---

* முதலுங் கடையுஞ்சேர்க்க, கோட்டுமலை—யானை.

உ

கணபதி துணை.

விபூதி.

உலகின் கண்ணுள்ள எல்லாச் சமயங்களுக்குத் தாரகமாய்த் தன்னைச்சார்ந்த மன்னுயிர்கள் எண்ணிய வெண்ணியபடியே இக பர நலமனைத்துந் தரவல்லது சைவசமயமேயாம். இச்சைவசமயத்தை அடைவதற்கு நல்லூழ் பொருந்திய தொல்லான்மாக்கள் வேதாகமங்களிற் பிரதிபாதிக்கப்படும் யாதொரு முழுமுதற் கடவுளாஞ் சிவபெருமானை வழிபடுமடியார்களாம். அச்சிவனடியாருக்குரிய சிவ சின்னங்களெல்லாம் முதன்மை பெற்று இன்றியமையாது வேண்டற்பாலது விபூதியேயாம். இவ்விபூதியின் மகிமை வேத சிவாகம சுருதி ஸ்மிருதி புராண இதிகாசாதி பிரமாண நூல்கள் விரிவாக எடுத்துரைக்கும் இவ்விபூதியை யன்போடு தரிப்பவர்கள் பாவங்களைத் தகித்தலால்—பஸ்மம் என்றும் சீவர்கள் ஆணவாதி மலங்களைக் கெடுத்தலால்—க்ஷாரம் என்றும் அணிந்தோர்களின் அஞ்ஞானத்தை நீக்கி ஞானத்தைப் பிரகாசப்படுத்துவதால் பசிதம் என்றும் அணிந்தோர்கள் ஆபத்தை நீக்கி இரக்ஷிக்குந் தன்மையால்—இரக்ஷை என்றும்—மெய்யன்போடு தரிப்பவர்களுக்கு எத்தகைய செல்வத்தினையும் தருதலால் விபூதியென்றும்—பெயர் பெறும். அநாதிமலமுத்த நிஷ்கள சொரூபியாகிய சிவபெருமான் சகளீகரித்து தமது பாகத்துறையும் பராசத்தியாரை நோக்கி பஞ்சகிருத்தியங்களையும் செய்யும்படி கட்டளையிட்டு தாம் சுயேச்சையாயிருக்க பராசத்தியார் இறைவனை நோக்கி அப்பஞ்சகிருத்தியங்களுக்குக் காப்பாய்த் தேவரீர் திருவடையாளம் எமக்கொன்றருள வேண்டுமென்று பிரார்த்திக்க சிவபெருமான் எல்லாந்தரவல்ல ஒப்பற்ற விபூதியை அம்மை கையிலளித்து இதுவே வேண்டிய யாவையும் நிரம்பத்தரும் பெரும்பொருளாகும், என்று திருவாய் மலர்ந்தனர்.

நீறுபுனை வார்வினையை நீறு செய்தலாலே
வீறுதனி நாமமது நீறெனவிளம்புஞ்
சீறுநரகத்துயிர் செலாவகை மருந்தாய்க்
கூறுடையதேவி கையின்முன் னிறைகொடுத்தான்.

நோயகலும் வாதவினை நுந்தும் வினையெல்லாம்
போயகலும் வெண்பொடி புனைந்தவுடனேமுன்
போயகலும் வஞ்சகப் பிறப்பினொடிறப்பின்
தாயகலும் நன்மைகடழைத்துவருமன்றே.

தீர்த்தமு மிதிற்பெரிய தீர்த்தமவையில்லை
பேத்தரிய செல்வமு மிதிற்பெரிய தில்லை
போர்த்துறை மருந்துகளிதிற் பெரியதில்லை
நீத்தவரு பண்டிதரும் நீற்றதிகரில்லை

சந்த வயனுரணர் பராசரர் வசிட்டர்
கந்தரணவேதி செயமாமுனிகணந்தி
தந்தமிலுணர்ந்து தருமந்தவமெவைக்கும்
வெந்தபொடி நீங்கினவை வீணென வுரைத்தா

(விருத்தாசலப் புராணம்)

இத்தகைய திருவெண்ணீறு அணியாதவர்களது முகத்தைக் கொளுத்தும்படி வேதங் கூறுகின்றது. தமிழ் வேதம் "திருவெண்ணீறணியாதூர் திருவில்லாதூர்" என்றும், சிவபெருமானது "சேவடி பரவி வெண்ணீறணிகிலாதவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே" என்றும், கூறுவதோடு ஔவைப் பிராட்டியாரும் "நீறில்லா நெற்றி பாழ்" என்றும் வற்புறுத்திக் கூறுகிறார். மதுரையில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் கூன்பாண்டியனது சுரத்தைத் தீர்த்து சமணரை வாதில் வென்று சைவஸ்தாபனஞ் செய்தருளியது விபூதியினாலன்றோ!

(தொடரும்)

அ. சுப்பிரமணியசுவாமி.

சிவமயம்.

ஜலகண்டபுரம் ஸ்ரீசன்மார்க்க சபையின் 4-வது வருஷ பூர்த்தி வைபவமும், ஓர் அற்புதப் பிரசங்கமும்.

சேலம் ஜில்லா ஓமலூர் தாலூக்கா, ஜலகண்டபுரத்தில் ஸ்தாபித்துள்ள இச்சபையின் நான்காம் வருட பூர்த்தி நாளது செப்டம்பர்-௴ 9, 10, 11 ஆகிய மூன்று தினங்களிலும் கொண்டாடப்பெற்றது. இம்மூன்று தினங்களுக்கும் முறையே அக்கிராசனர்களாக சென்னை சைவசித்தாந்த பத்திராதிபர், சித்தாந்த சரபம், அஷ்டாவதானம், சிவ ஸ்ரீ கல்யாண சுந்தரயதீந்திர சுவாமிகளும் செவ்வாய்ப் பேட்டை செந்தமிழ்ச்சங்கம் பிரசிடெண்டு பாகல்பட்டி ஸ்ரீமான் V. **பொன்னுசாமி நாய்க்கர்** அவர்களும், அவரது சகோதரர் ஸ்ரீமான் V. **மாணிக்கம் நாய்க்கர்** எக்ஸயூடிங் இஞ்சினீர் P. W. D. (C. Engg. Madras) M. C. J. London) அவாகளும் அமையப் பெற்றனர்.

யதீந்திரசுவாமிகள் கம்ட்டியாம் பந்தல் சைவசித்தாந்த சபை பிரசிடெண்டு ஸ்ரீமான் T. **சபாபதி முதலியா**ரவர்களுடன் 7-தேதி மாலை புறப்பட்டு சூரமங்கலம் ஸ்டேஷனில் இறங்கி இச்சபையின் நிர்வாக கமிட்டிச்சேர்மென், பாகல்பட்டி மிட்டா ஜமீன்தார் ஸ்ரீமான் P. L. **இராமசாமி நாய்க்கர்** அவர்களால் வரவேற்கப்பெற்றுப் பாகல்பட்டி போய் 8-தேதி பிற்பகல் தாரமங்கலம் மார்க்கமாய் வருகையில் அவ்வூர் கனதனவான்கள் ஷெயூர் சிவாலய தர்மகர்த்தாவாகியவரும் நமது சபைக் கமிட்டிச்சேர்மேனுமாகிய மகா-௱-ஸ்ரீ பாகல்பட்டி மிட்டா ஜமீன்தார் P. L. இராமசாமி நாய்க்கர் அவர்களிட பிரேரபணையின் மேல் அவ்வூரிலும் ஒரு சங்கம் ஸ்தாபிக்க விரும்பியபடி "சண்முகாநந்த சபை" என்னும் பெயருடன் ஒரு சபையை ஸ்தாபித்து அரிய பிரசங்கங்களால் யாவருக்கும் தமிழிலும், சைவத்திலும் அன்பு பெருகச்செய்து 9-ந் தேதியில் அநேக வித்வசிகாமணிகளும், பிரபுக்களும் புடைசூழ அக்கிராசனாதிபராகிய மற்றை இருவருடன், சபைக்கு விஜயம் செய்தனர்.

அன்று பிற்பகல் 2-மணிக்கு அநேக ஜனங்களினிடையே யதீந்திர சுவாமிகளுக்கு சபையோர் வந்தனோபசாரப் பத்திரம் அளிக்க அக்கிராசனத்தில் அமர்ந்து வழக்கம்போல் முன்னுரை கூறி, நமது தமிழ்ப்பாஷை மிகப் புராதனமானது; நாம் அடையும் எவ்வித நாகரீகங்களுக்கும் அப்பாஷை வழிகாட்டி

யாகின்றது சைவமணிக்கமழும் தமிழ் நூற்கள் மிகவும் பாராட்டிக் கற்கத் தக்கவை 'சைவம்போல் சிறந்த மதம் வேறில்லை என்று முடித்தனர்.
கடவுள் வாழ்த்து: அவிநாசி சைவசித்தாந்த சபை மெம்பரும், ஆதி சைவப் பிராம்ஹணோத்தமருமாகிய **பிரம்ஹ ஸ்ரீ சிவராமக்குருக்கள்** அவர்களாலும் கருவலூர் **பிரம்ஹ ஸ்ரீ. சந்திரசேகரசிவா** அவர்களாலும், தேவார திருவாசகங்கள் இன்னிசையுடன் ஓதப்பெற்றது, கர்ணானந்தமாயிருந்தது. இராஜவாழ்த்து சபையின் அங்கத்தவர் ஸ்ரீமான் அ. **வரவநஞ்சைய பிள்ளையவர்களால்** கூறப்பட்டது நமது காருண்யப் பிரிட்டிஷ் துரைத்தனத்தார் புரியும் தர்மயுத்தம் விரைவில் ஜெயத்துடன் முடிவுபெறவேண்டுமென்று கடவுளை வாழ்த்தி வணங்கப்பட்டது.

சபையின் அறிக்கை ரிபோர்ட்டு:— சபையின் வைஸ்பிரசிடெண்டு ஸ்ரீமான் **கி. து. சிவலிங்கசெட்டியாரவர்களால்** வாசிக்கப்பட்டது.

பாகல்பட்டி ஸ்ரீமான் **பொன்னுசாமி நாய்க்கர்** அப்பூதியடிகள் சரித்திரத்தைப் பெரிய புராணக் கவிகளின் நயம்பலவும் எடுத்துக்காட்டிக் கேட்போர் அன்பாலுருகுமாறு பிரசங்கம் புரிந்தனர். திருக்கோயிலூர் ஸ்ரீமத் ஞானியார் மாணவர் கழகத்தலைவர் புலிசை **ஸ்ரீமான் குமாரசுவாமிப் பிள்ளையவர்கள்** எழுந்து மடமடவெனக் கடல் மடை திறந்தாற்போல் திருப்பணிநாயன்மார் என்னும் இரு விஷயத்தையும் அருமை பெருமை விளங்க மொழிந்தனர். அவிநாசி சைவசித்தாந்த சபாங்கத்தவராகிய **ஸ்ரீமான் குமாரசுவாமி பிள்ளையவர்கள்**, 'திருவருள்' என்னும் விஷயத்தைக் கேட்போர் கருத்திற்பதிய விளக்கினார். ஒவ்வொரு பிரசங்கமும் முடிந்தவுடன் அக்கிராசனாதிபர் பிரசங்கிகளின் வல்லமையைச் சபையோர்க்கு எடுத்துக்காட்டி மகிழ் வூட்டினர்.

மறுதினம் (10-9-16.) காலை 8-மணிக்கு செவ்வாய்ப்பேட்டை செந்தமிழ்ச்சங்கம் பிரசிடெண்டு, **ஸ்ரீமான் V. பொன்னுசாமி நாய்க்கர்** சபாநாயகராக அமர்ந்து தமது முன்னுரையில், " தமிழின் அருமை பெருமைகள் அறியாத பலரால் உபேக்ஷிக்கப்பட்டுக்குன்றி வரும் இக்காலத்தில் இம்மாதிரி சங்கங்கள் ஆங்காங்கு ஏற்படுவது தமிழினிடத்துக் கடவுள் செய்யும் அனுக்கிரக விசேடமே. தமிழர்கள் மனத்தில் இந்நல்லெண்ணம் உதிப்பது நற்காலத்தின் அறிகுறியாகும் என்னை இந்த ஸ்தானத்தில் அமர்த்தியது உங்களுக்கு என்மேலுள்ள விருப்பத்தைக் குறிக்குமானாலும், கற்றுவல்ல பண்டிதர்கள் இக்கருத்தற்குரிய ஸ்தானத்தில் நான் இருந்து என் சக்திக்கு மீறிய ஒன்றைச் செய்வது உள்ளுகருள் கடினமென்றே நினைக்கிறேன் " என்று மொழிந்து

வித்யாசபைக் காரியதரிசி ஸ்ரீமான் S. M. நாராயணசாமி பிள்ளையவர்கள் பல திருஷ்டாந்தங்களுடன் நயம்பட உரைத்தனர்.

'திருநீலகண்ட நாயனார்' சரித்திரத்தைப் பெரிய புராணத்தினின்று செய்யுட்களின் நயங்களையும் கவி சாதுர்யத்தையும் நன்கு விளக்கி, ஸ்ரீமான் **அ. வரதநஞ்சையபிள்ளையவர்களும்,** கம்பர் சூத்திரம், என்றெடுத்துக்கொண்டு "மாரீசன் வதைப்படலத்தில், என்னென்று நினைத்து" என்பது முதல் சில கவிகளுக்கு இரண்டு மூன்று அர்த்தங்கள் நவநவமாய் உரைத்து காங்கயம் அஷ்டாவதானம் வித்வான் ஸ்ரீமான் **சேஷாசல நாயுடு** அவர்களும், 'கம்பர் கவிநயம்' என்னும் விஷயத்தைச் சில செய்யுட்களால் புதிய பொருள்தோற்றி ஈரோடு **ஸ்ரீமான் அப்பாவு முதலியாரவர்களும்** பிரசங்கிக்க அவ்வப்பிரசங்கங்களின் அருமைகளை அக்கிராசனர் பாராட்டிப் பேசினர்.

பிற்பகல் **2**-மணிக்கு சிவ ஸ்ரீயதீந்திரர் அக்கிராசனத்தில், ஸ்ரீமான் மாணிக்கநாய்க்கர் (இஞ்சினீர்) அவர்கள், "கற்றும் கல்லாத அரிச்சுவடி" என்னும் தலைப்பில் பின் வருமாறு ஓர் அற்புதம் பிரசங்கம் புரிந்தனர். "அக்கிராசனரே! சபையோர்களே! நான் சிறுவன், ஒன்றுமறியாதவனென்பதை இதோ என் கையிலுள்ள தமிழ் எட்டு அரிச்சுவடி (நெடுங்கணக்கு) காட்டுகிறது. இத்தனை வருடங்களாகப் படித்தும் நான் தமிழின் முதலெழுத்தாகிய அகரத்தைச் சரியாய்த் தெரிந்துகொண்டேனில்லை. உங்கள் முன்னே இருக்கும் கறுப்புப்பலகையில் ஒரு 'அ' எழுத்தைப் பார்க்கிறீர்கள். அதில் ஓம் என்னும் பிரணவ வடிவமிருக்கிறது. அகர, உகர, மகரக் கூறுகள் மூன்றும் கூடி ஓம் என்னும் ஒலி வடிவம் உண்டாகிறது. அதை வரிவடிவிலிருக்கப் பார்த்தீர்களா? என்று கூறி, அ எழுத்தை அ எனக்கூத்திரித்து மூன்று உருவங்காட்டி இதில் | இக்கோடு பதி எழுத்து; இது அகரக்கூற்றின் அடையாளம். உ இது பசு எழுத்து. இதில் சுழித்தல் ○ பிந்து —— நீட்டல் நாதம். நாதவிந்து சம்மந்தமான ஜீவர்களை இது குறிக்கின்றது. தலைகீழாக ம இப்படி அமைந்த மகரம் பாச எழுத்து. அதாவது மலம், மாயை முதலியவை—பதியெழுத்தாகிய கோடு | பசு எழுத்துடன் கலந்து மேல் நோக்கி நிற்றல் அ பதி பசுவைக் கலந்து தலைமை பெற மேற்கதியிற் செலுத்த நிற்கும் உண்மையை உருவத்தில் காட்டுகின்றது. இனிப்பாச எழுத்து பசு எழுத்தோடு பிரிவற இணங்கிக் கீழ் நோக்கி அ இவ்வாறு நிற்றல் பசுவைப் பாசம் நன்றாய்ப்பற்றித்து கீழ் நோக்கி அதாவது நரக கதிக்கு இழுத்துச் செலுத்தலை யுணர்த்தும். இதில் ம என்னும் பாச எழுத்து தலைகீழாய்

அமைந்த காரணம் அது சங்காரத்தை உணர்த்தும். இறுதி எழுத்தாகையால் தமிழ்ப்பாஷையின் ஆரம்ப எழுத்தில் நேராக நிறுத்துவது அப்பாஷையின் விருத்தியைக் கெடுக்கும் என்று கருதி தலைகீழாக மாற்றுவதால் இறுதிக் கெதிராகிய சிரஞ்சீவித் தன்மையுண்டாமென்றே இங்ஙனம் தலைமாற்றி அமைக்கப்பெற்றது. எல்லா எழுத்துக்களும் பதி எழுத்தாகிய சிறு கோட்டாலே தொடங்கி நிகழ்ந்து முடிதலின் சிருஷ்டி திதி சம்மாரம் முதலிய முத்தொழில்களும் இறைவன் செயலாதல் விளங்கிற்று. மேற்காட்டியவாறே உ, ம, என்னும் பசுபாச எழுத்துக் களிற்றலைமை பெற நின்று நிகழ்த்தல் இறைவன் உமாபதி என்னும் பேருடையானென நினைப்பூட்டுகின்றது.

பிரணவமில்லாத பாஷை என்று தமிழைப்பழிக்கும் விவேகிகள் வேறெந்தப்பாஷையின் எழுத்தைக்கொண்டாவது இவ்வுண்மையை விளக்க முடியுமா? எழுதா வேதம் வடமொழி மறை. எழுதிய வேதம் எங்கள் தென்மொழி மறை "இரு மொழிக்கும் கண்ணுதலார் முதற்குரவர்." "அகர முதல எழுத்தெல்லாம்," என எங்கள் தமிழ் வேதம் தொடங்குகின்றது. அகரத்தின் பெருமைத் தலைமை இவ்வுண்மையே. இங்ஙனம் அகரத்தாற்றொடங்கி 1330-ங் குறளாகிய இறுதிச் செய்யுள் "ஊடுதல்...........பெறின்" என னகரவொற்றால் முடிவது தமிழ்ப் பாஷையின் ஆதி அந்த எழுத்துக்களை உணர்த்தியவாறாம். தமிழ் இலக்கண நெறி பற்றி நம் தெய்வப்புலவர் வீடு கூறாராயினும் இறுதிச் செய்யுளாகிய, மேகுறித்த "ஊடுதல் காமத்திற் கின்பமதற்கின்பம், கூடி முயங்கப் பெறின்" என்பதில் வீடு பேற்றை உய்த்துணர வைத்தோதியுள்ளார். ஊடுதல் — (ஆன்மாக்கள் இறைவனோடு அதற்கின்பங்கலந்து பேரின்படைய வறியாது அவன் அணித்தாயிரும்பவும்) பிணங்குவது. காமத்திற்கு இன்பம்—பாசவின்பம். அதற்கு இன்பம்—அவ்வின்பத்திலும் மிகச் சிறந்தவின்பமாவது கூடி — (தன்னையுந் தலைவனையும் அறிந்து, தான் அவனையன்றி யாதுமின்பம் பெறுதற்கும், மற்றோர் காரியம் செய்யுஞ் சுதந்திரம் பெறுதற்கும், வழியின்மை கண்டு) அவன் அருளைக்கலந்து, முயங்கப்பெறின்—தான் அவன் என்னும் பிரிப்பறத் தற்போதம் நழுவாமல் நழுவி நிற்கப்பெறுங்கால் விளைவதாம், என்பது இதன் கூடார்த்தம் "பெறின்" என்னும் சொற்பிரயோகம் பெறலருமையை விளக்கிற்று. "நாளெனவொன்று போற் காட்டி யுயிரீரும், வாளது ணர்ப்பெறின்" என் புழிப்போல. கூடலும் முயங்கலும் இன்பம் பெறலுமாகிய பொதுத்தன்மைக்கு நாயகன் நாயகி போலத் தலைமைச்சித்தும், தலைமையில் சித்தும், வேண்டுதலின் வீடுபேற்றைச் சைவசித்தாந்தத்தே துணிந்தார் வள்ளுவனாரென்பது போதரும்.

திண்ணைப்பள்ளிக்கூடங்களில் அனு ஆவேனு என்று படிப்பதைக்கேட்டு நான் அகரச்சைதப்போல வளைத்துக் கூனி நிமிர்ந்து ஆவேனு என்று அடிக்கடி பழித்துச் சிரித்ததுண்டு இப்போது அரகமாகிய பிரணவமந்திரப் பொருளாகிய இறைவன்போல நான் பற்றற நின்று பரமானந்தமாவேனு என இரங்குவதாகக்கண்டு அடங்காமகிழ்ச்சி அடைகின்றேன். சில வருடங்களாக இந்த அகர எழுத்தின் மஹா பாஷ்யம் எழுதி வருகின்றேன். நமது மதசாஸ்திரங்களுக்கும் பாஷை அக்ஷரங்களுக்கும் அமைந்த பரமரகசிய ஒற்றுமைகளை நான் கண்டுகொண்ட புது வழியில் நீங்களும் இறங்கி என்னைப்போல் ஆராய்ந்து காணும் ரகசியங்களை மறையாமல் வெளியிடுங்கள். அப்போதுதான் நமது மதமும் பாஷையும் உயர்வடையும். நமக்கு இன்னும் தமிழின் முதலெழுத்துக்கே சரியான அர்த்தம் தெரியவில்லை. அவ்வுண்மையை முற்றுமுணர்ந்து அனுபவித்துத்தான் அடுத்த ஆவேனு என்னும் எழுத்தைப் படிக்கவேண்டும். சைவசம்மந்தமான இன்னும் பல விஷயங்களை நாளை என் அக்கிராசன முடிவுரையில் விளக்குவேன் ” என்று முடித்தனர்.

இமை கொட்டாது நோக்கிக் காது குளிர வியந்து கேட்ட சபையோர் இவரது ஆராய்ச்சித்திறத்தையும் அவர் சென்ற புது வழியையும் புத்திக்கூர்மையையும் மிகப்பாராட்டி சந்தோஷ ஆரதாரம் செய்தனர். சபாத்யக்ஷகர் எழுந்து நமது மதங்களின் தாயாகிய வேதப்பொருள் காதால் கேட்டறியத்தக்க ஒலி வடிவுமாத்திரமே, என்று நாம் இத்தனை காலமாக எண்ணியிருந்தோம் அது பிசகு. கண்ணுக்கும் காணலாம் என வரிவடிவில் வைத்துக்காட்டி நமக்கு உபதேசித்தபடியால் இவரை பரமசிவத்துக்குப் பிரணவப் பொருள் கூறிய சாக்ஷாத் முருகக்கடவுளின் அம்சமென்றே கொள்கின்றேன். முருகபிரான் 'இப்பொருளைத்தான் பரமேஸ்வரனுக்கு உபதேசித்திருக்கவேண்டும். நான் சைவசித்தாந்த சாஸ்திரத்தில் நெடுநாட்பழக்கமுள்ளவன். இவவுண்மை இதுவரையிலும் அறிந்தேனில்லை. வலிகொண்டு சித்தாந்தத்தை யாரும் எளிதில் உணரநிலை நாட்டலாம், எனப்பன்முறை வியந்து பாராட்டினர்.

இயற்பகை நாயனர் சரித்திரத்தைச் சபைமெம்பர் ஸ்ரீமான் சிதம்பர செட்டியாரவர்களும் மருளசங்கரதேவர் சரித்திரத்தை பிரபுலிங்க லீலையினின்று சபை மெம்பர் ஸ்ரீமான் பேத்தண்ண பண்டாரம் அவர்களும் இளையான் குடிமாற நாயனரைக்குறித்துக் கவிநயம் காட்டி சபை மெம்பர் ஸ்ரீமான் தம்மண்ணசெட்டியாரவர்களும், ‘கல்வி’ என்னும் தலைப்பில் முற்கால தற்காலக்கல்வியின் பேதங்களையும், தொழிற் கல்வியின் மேன்மைகளையும் விசே

ஷித்து அரங்கனூர் ஸ்ரீமான் வேங்கிடாத்திரி பிள்ளையவர்களும் வைதிக சைவம், என்றெடுத்து உதாரணங்களுடன் சைவசித்தாந்தத்தின் உயர்வைப் பல மதங்கள் ஒப்பும் வண்ணம் ஸ்ரீமான் வாதநஞ்சைய பிள்ளையவர்களும்' இனிமை பெற நயப்பாடு தோன்றப் பிரசங்கித்தனர். அக்கிராசனரால் பிரசங்கங்களின் திறமை புகழ்ந்து கூறப்பெற்றது.

மூன்றாந்தினம்: (11—9—16) காலை 8-மணிக்குக்கூடிய சபையில் ஸ்ரீமான் பொன்னுச்சாமி நாய்க்கர் அக்கிராசனம் வஹித்தனர். தர்மம் என்ற விஷயம் ஓமலூர் யூனியன் கிளர்க்கு ஸ்ரீமான் ஐயாசாமிக்கவுண்டர் அவர்களால் விஸ்தரிக்கப்பெற்றது. கர்மயோகம் என்றெடுத்து திருச்செங்கோடு பிர்க்கா ரிவினியூ இன்ஸ்பெக்டர் A. கந்தசாமி பிள்ளை B. A. அவர்கள் நிஷ்காம்ய கர்மமே, கர்மயோகம். அது மோக்ஷத்தின் நேர் வழி. செய்யப் பழக வேண்டும். ஸ்ரீமான் காந்தியவர்கள் கோபால கிருஷ்ண கோகலே போன்ற கர்ம யோகிகள் இக்காலத்திலுமுண்டு, என அருமை பெருமை விளங்கப் பேசினர். பகவத்கீதை பன்னிரண்டாம் அத்தியாயம், என்ற விஷயத்தைப்பற்றி சேலம் கழறிற்றறிவார் சபைக்காரியதரிசி ஸ்ரீமான் அர்த்தநாரீச நாய்க்கர் அவர்கள் இனிய தொனியுடன் கேட்போர் கருத்துக்கவர மொழிந்தனர்.

சபையின் பெருமையைக் குறித்து, ஆலூத்துப்பாளையம் பழனியப்ப கவுண்டர் அவர்கள் சுருங்க விளங்க உரைத்தனர். அக்கிராசனர் முடிவுரையில் பிரசங்கிகளின் நுண்ணறிவைப் புகழ்ந்துரைத்து இராமாயணக் கவிகளில் சிலவற்றை இருபொருள் முப்பொருள்பட விஸ்தரித்து நயங்களை விளக்கிப் பிரசங்கித்தது கேட்கக்கேட்கப் பரமானந்தமாயிருந்தது. கம்பர் இராமாயணத்தில் அவரது வல்லமை மிக மெச்சத்தக்கதென்று பலரும் சிறப்பித்தனர்.

பிற்பகல், 2-மணிக்கு ஸ்ரீமான் மாணிக்கநாய்க்கர் அவர்கள் (P. W. D. இஞ்சினீர்,) அக்கிராசனம் வஹித்தனர். வந்தனோபசாரப்பத்திரம் அளிக்கப் பெற்றது. 'சங்க சம்மந்தமான கடமைகள்' என்னும் விஷயத்தை கட்டியாம்பந்தல் சைவசித்தாந்த சபை பிரசிடெண்டு ஸ்ரீமான் T. சபாபதி முதலியாரவர்களும், 'கண்ணகியும், கோவலனும்' என்னும் விஷயத்தை ஸ்ரீமான் அஷ்டாவதானம் சேஷாசலநாயுடு அவர்களும், பூர்வீக தமிழ்க்கவிராஜரும் புவிராஜரும் என்னும் விஷயத்தை ஸ்ரீமான் வாதநஞ்சையபிள்ளை யவர்களும் தக்க மேற்கோள்கள், சங்கநூற்களினின்றும் உதகரித்து விஸ்தரித்துரைத்த பின், அவர்களின் பிரசங்கத்தைப்பற்றி நல்லபிப்பிராயம் கூறிச் சபாநாயகர்

தமது முடிவுரையில் நேற்றுக்கூறிய விஷயத் தொடர்ச்சியைத் தொடங்குகின்றேன் என்று எழுந்து "ஓர் பெரிய அகர எழுத்தைக் கடிதத்தில் எழுதி அதனை ஏற்றபடி 10-துண்டுகளாகக் கத்தரித்து, தக்கவாறு இணைத்துப் பொருத்தி நமசிவாய என்னும் பஞ்சாக்ஷரத்தை உற்பத்தி செய்து காட்டினர். இப்பத்துத்துண்டுகளும், ஈசுவரனது ஐம்முகங்கட்கேற்ற பத்துக்கைகளைக் குறிக்கும் என்றும், பின் அவ் வைந்து அகரங்களினின்றே, சடாக்ஷரம் பிறந்ததென்பதற்கு நிதர்சனமாக, ஐந்து அகரங்களை முன்போல் எழுதி அதில் ஒன்றை நிறுத்தி, நான்கு அகரங்களையும் பன்னிருதுண்டுகளாக்கி 'சரவணபவ' என இணைத்து ஈஸ்வரனிடத்திலிருந்து நான் மறைப்பொருளாக சுப்ரமண்யர் உதித்த குறிப்பை யுணருங்கள். இப்பன்னிரண்டு துண்டும் அப்பிரானது பன்னிருகரங்களைக்காட்டும், என்று காட்டினர். ஓர் உமாமகேஸ்வர படத்தை எடுத்து அதன் வெளிக்கோணங்களை (Out line) ஒரு பென்சிலால் வலம்படக் கீறிக்கொண்டுவர ஓம் என்னும் இவ்வருவமைந்தது. அங்ஙனமே விநாயக மூர்த்தி படத்தில் இரண்டு ஓங்காரமிருத்தலைவிளக்கி இலக்கமுறையில் ஒன்று முன்னும் இரண்டு அதன் பின்னும் ஆறு அதன் பின்னும் வருதலால் ஈசுவரனுக்கு மூத்த பிள்ளை கணேசனும், கணபதிக்குத்தம்பி முருகக்கடவுளுமானார் என்று அறியலாம். ஒவ்வொரு பொருளும் ஒலிக்கும் அல்லது ஒன்றோடொன்றிணைந்து ஒலியை விளைக்கும். கோவில்களில் பூஜாகாலத்தில் மணியடிப்பது அவ்வோசை ஓம் என்னும் பிரணவ நாதத்தை விளைப்பது பற்றியே.

நம் தமிழெழுத்துக்கள் வலம்படச்சுழல்வன இதுவே நாம் கோவில்களில் பிரதக்ஷணம் செய்யும் வழக்கத்தைக் கற்பித்தன. அபரக்கிரியைகளில் அப்பிரதக்ஷணம் செய்கின்றோம். ட. ம. போன்ற சில எழுத்துக்கள் அப்பிரதக்ஷணமாய்ச்சுழல்வன அவை மடிபிடி முதலிய அபவார்த்தைகளில் வழங்குகின்றன. பஞ்சாக்ஷரத்தில் மகாரம் மலத்தை உணர்த்தும் எழுத்தென்று சொல்வர். இதுவரையில் நான் அறிந்த இரகசியம் இச்சபையார் எனக்குச்செய்த விசேஷ மரியாதைக்கு ஈடாக இங்கே சொல்ல நேர்ந்தது. இப்புது ஆராய்ச்சியில் அப்போதப்போது எனக்குத் தோன்றிய விஷயங்களை ஒரு புத்தகத்தில் குறித்து வருகின்றேன். அவை பிறர் வாசிக்க முடியாத சுருக்கக் குறிப்புகள் விரித்தெழுத என் வேலை அவகாசம் தரவில்லை விஷயப்பெருமைக்கேற்பக் காலம் இடம் தராமையால் இம்மட்டில் நிறுத்துகிறேன். இச்சபை பிரணவ தரிசனத்தால் நீடூழி வாழ்வதாக என்று மொழிந்தனர் சபையோர் கரகோஷம் செய்தனர்.

(தொடரும்)

உற்றதுரைப்போன்.

சுவாமி விவேகாநந்தர்.

சுவாமி விவேகாநந்தரைப்பற்றி யறியாதார் அறியாதாரே. அவரது ஞானாசாரியாராகிய ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரே இவரை (பல வேறு கலைஞானங்களையும் ஒருங்கே யுணர்ந்து கொள்ள வல்லமை படைத்திருப்பதால்) ஆயிர இதழ்த்தாமரை யெனவும்; (யாவரினும் சிறந்து ஒப்புயர்வற்ற மகானாயிருத்தலினால்) † ரோஹித மச்சம் என்றும் (பூமியில் விழுவதற்கு முந்திய தத்துவ ஞானமுணர்ந்த பெரியோர் ஆகியிருப்பதால்) ஹோமாப பறவை யெனவும், வாயாரப் புகழ்ந்தாரெனில், இவரது பெருமையைக் கூற நாம் யார்?

எனினும், இந்தியனாய்ப் பிறந்துள்ள எவனும் இவரைப் பற்றிச் சிறிதும் அறியான் எனின் அவன் பிறந்தும் பிறவாதவனே யாகின்றான்.

"மெல்லியராகித்தம் மேலாயார் செய்தது
சொல்லாதிருப்பது நாண்"

ஆகையினால், உலகைப் புனருத்தாரணம் புரியவந்த இப்பெரியாரின் சரிதத்தையும் உபதேசங்களையும் எனது சகோதர ஜனங்களுக்கு எளிதிலுணர்த்த வேண்டுமென்பது எனது நெடுநாளைய எண்ணம்.

இவை ஆங்கிலமொழியிலே முழுவதும் அறியக்கிடக்கின்றமையால் இவற்றை எனக்குத் தெரிந்தமட்டில் தமிழில் எழுதி வருகின்றேன், இவ்விஷயத்தில் என் கடமையை நிறைவேற்ற அந்த மகானின் திருவருள் கூடுவதாக.

மேற்கூறியவாறு இவர் புகழ்பெறுவதற்குக் காரணமாயிருந்த குணங்களில் முக்கியமானவை—உள் நோக்கமும் (Introspection) நித்ய பிரமசரியத்துவமு மாகும். இளமைதொட்டே யிவர் அந்தர் திருஷ்டி யுடையவராயிருந்தார்.

இத்தகைமை வாய்ந்த இவரிடத்துக் காணப்பட்ட ஓர் ஆச்சரியம் யாதென்றால்—இவர் நாஸ்திகரா யிருந்தமையே, ஆழ்ந்த உணர்ச்சியுடைய ஒருவர் எப்படி ஆஸ்திகராகமலிருக்க முடியும்?

ஆனால் இவருடைய நாஸ்திகத்துக்கும்—விஷய போகங்களிலழுந்திச், 'சாமியாவது, பூதமாவது' எனக்கூறுகிற அறிவிலிகளின் நாஸ்திகத்துக்கும—நெடுவாசியுண்டு. இவரது நாஸ்திகம் விஷய விரக்தியோடு கூடியது.

அதனால் இவர் ஆன்ம சம்பந்தமான சகல தத்துவங்களையும் அங்கை நெல்லிபோல் உணர்தற்கும், 'காரணங் கடந்த

---

† ஓர்வித மீன் — "பனைமீன்" என்பது போல்வது (மதுரைக் காஞ்சி.)
* இப்பறவை, பறக்கும்போதே முட்டைவிட்டுப் போகுமென்றும், அம்முட்டை பூமியில் விழுவதற்கு மத்தியிலே முட்டையிலிருந்து குஞ்சு வெளிப்பட்டுப் பறந்துவிடும் என்றும் கூறுவர்.

வன்' ஆகிய கடவுளின் நிலையையறிந்து சுவானுபூதியாதற்கும் பேராசையுடையவராய், உள்ளது உள்ளபடி யுணர்த்தக்கூடியவர் எவரேனுமுண்டா? என்று ஏக்கங்கொண்டிருந்தனர்

அதனாலேதான் இவர் எந்தச் சந்நியாசிகளையாவது, சாதுக்களையாவது எதிர்ப்படின், "என்ன? நீர் கடவுளைக் கண்டதுண்டா? கடவுள் இருக்கிறாரா? நிஜமா? எனக்குக் காட்டித்தர முடியுமா?' என முறுக்காய்க் கேட்பர்.

அவர்கள் "ஆம் கடவுள் உண்டு, நாங்கள் நம்புகிறோம்; சாஸ்திரங்களும் முறையிடுகின்றன" என்பர்.

இவர் "சாஸ்திரங்கள்? அதெல்லாம் வேண்டாம். ஏட்டுச்சுரைக்காய். நீங்கள் அறிந்ததுண்டா? சாஸ்திரத்திலிருக்கிறது என்பதற்கு நீங்கள் வேண்டுமோ? உங்கள் அனுபவத்தைச் சொல்லுங்கள்" என்பர்

அவர்கள் யாது செய்வர்? ஒன்றும் சொல்ல இயலாது மவுனமாய்ப் போகவே இவரும், ஆராக்காதலோடும், தீராச் சந்தேகத்தோடும் திரும்புவார்

யாராவது ஒரு சாமியார் இருக்கிறாரென்றால் போதும், அங்கு ஓடுவர்; வினவுவர்; இவ்விஷயத்தில் இவருக்கு இருந்த தாகம் இவ்வளவவ்வளவன்று.

"சோதியே சுடரே யுன்றன் தூமலர்ப் பாதங் காண்பான்
ஆதியே யலந்து போனேனதிகை வீரட்டனாரே"
(தேவாரம்.)

என்றவாறே யலைந்தார்.

இந்த நிலைமையில்தான், இவர், மகரிஷி தேவாந்திர நாத் தாகூர் தியானத்திலிருந்தவரை யணுகிச் சந்தர்ப்பத்தையும் நோக்காது, அலட்டித் தமது சந்தேகத்தை வினவுவாராயினர். வெயிலில் வருந்தியவன் நிழலைத் தேடியோடுவதுபோல் க்ஷணத்துக்கு க்ஷணம் அதிகரிக்கும் பெருங்காதலும் ஆதாரமும் உடைய இவரது அதிதீவிர பக்குவத்தை யென்னென்பது?

"பெரியீர்! தாம், கடவுளைக் காண்கிறீர்களா? நான் கண்டுகொள்ள முடியுமா? காட்டுவீர்களா? முதற் பட்சம் கடவுள் இருப்பது உண்மையா? எனக் கேட்டனர்

அதற்கு அவர் சொன்னது ஒன்றும் இவரைத் திருப்தி செய்யக்கூடிய சரியான பதிலாக இருக்கவில்லை. கடைசியில் அவர் "குழந்தாய்! உனக்கு யோகியரின் கண்கள் இருக்கின்றன" (நீவிரைவில் பார்க்கக்கூடும், எனக்கு இல்லை, என்னால் பார்க்கமுடியவில்லை என்றபடி) என்றனர்.

P. V. அகோரம் ஐயர், B. A.,
Asst., English lecturer of the College, Coimbatore.

* இப்போது உலகமறிந்த கவியாய் உள்ள ரவீந்திர நாத தாகூரின் தந்தையார் இவர்.